| அசல் வழக்கு எண்.154/2019 | | வா. சா . 1 | தேதி.16.11..2022 | |
|---|---|---|---|---|
| பெயர் | திருமதி. வள்ளியம்மாள் | | வயது | 51 |
| த/பெ. | திரு.சுப்பைய ன் | | கிராமம் | வெள்ளியங்காடு |
| முகவரி | முத்துக்கல்லூர் | | மாவட்டம் | கோயமுத்தூர் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | | |

சாட்சி முன்னிலையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் 94 செண்ட் ஐ வாங்கினோம். அது 80 செண்ட்தான் உள்ளது என சொல்லி உள்ளார்கள் அதனால் இந்த வழக்கை போட்டுள்ளேன் இந்த சொத்து ஆரம்பத்தில் சாமிநாதன் அவரது மகன் ரஞ்சித்குமார், மகள் ராதா ஆகியோருக்கு ஆரம்பத்தில் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து சர்வே எண்.486/1. அந்த சர்வே எண்ணில் 2 ஏக்கர் 15 செண்ட் நிலம் உள்ளது. நாங்கள் 94 செண்ட் வாங்கி உள்ளோம். அந்த நிலமானது சாமிநாதன் பெயரில் இருந்தது. நான் 2002 ல் கிரையம் வாங்கினேன். உட்பிரிவு செய்ய இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 486/1 ல் இன்றைய தேதியிலும் சாமிநாதன் பெயரிலும் என்னுடைய பெயரிலும் பிரதிவாதியின் பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான்.

2. எங்கள் பெயரில் தனிச்சிட்டா வந்துள்ளது. 94 செண்டில் சுவாதீனத்தில் உள்ளதை காண்பிக்க எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 94 செண்ட் நிலத்தை வாங்கவில்லை என்றும் 80 செண்ட் நிலத்தைதான் வாங்கினேன் என்றும் அதனால்தான் 94 செண்டிற்கு எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ( நீதிமனற்த்தில் நேரமின்மை கருதி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

P K SIVAKUMAR
Digitally signed by P K SIVAKUMAR
Date: 2022.11.18 18:43:07 +0530

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.